


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 04 | Issue: 072 | 4 Pages | 11.10.2026 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 04 | இதழ்: 072 | 4 பக்கங்கள் | 11.10.2026 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**அருள்வெஃகி யாற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்**
**பொல்லாத சூழக் கெடும்**

**விளக்கம்:**
அருளை விரும்பி அறநெறியில் நின்றவன், பிறனுடைய பொருளை விரும்பிப் பொல்லாத குற்றங்களை எண்ணினால் கெடுவான்.

# பூந்தமல்லிவடபழனி மெட்ரோ சேவையை இன்று தொடங்கி வைக்கிறார் பிரதமர் மோடி

சென்னை, அக். 11

பிரதமர் மோடி டெல்லியில் இருந்து விமானம் மூலமாக இன்று காலை 11 மணிக்கு சென்னை விமான நிலையத்துக்கு வருகிறார்.

தமிழகத்தில் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு முதல் முறையாக பிரதமர் மோடி இன்று (ஞாயிற்றுக்கிழமை) சென்னை வருகிறார். அவர் இங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இதற்காக டெல்லியில் இருந்து விமானம் மூலமாக இன்று காலை 11 மணிக்கு சென்னை விமான நிலையத்துக்கு வருகிறார். அங்கிருந்து கார் மூலம் போரூர் மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு செல்கிறார். அங்கு அவரை முதல்அமைச்சர் விஜய் மற்றும் அமைச்சர்கள் வரவேற்கின்றனர். ரூ.750 கோடியில்புதிதாகஅமைக்கப்பட்டுள்ளபூந்தமல்லி வடபழனி மெட்ரோ ரெயில் வழித்தடத்தில், போரூர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து பூந்தமல்லி மெட்ரோ ரெயில் நிலையம் வரை பிரதமர் மோடியும், முதல்அமைச்சர் விஜய்யும் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்கின்றனர்.

இந்தப் பயணத்தின்போது பிரதமர் மோடி மாணவர்கள் மற்றும் தொழிலாளர்களுடன் கலந்து ரையாடுகிறார். அதன்பிறகு, அங்கிருந்து புறப்படும் பிரதமர் மோடி, பகல் 12.15 மணிக்கு சென்னை ஐ.ஐ.டி.வளாகத்துக்குவருகிறார். அங்குள்ள ஜலகண்டேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்து வழிபாடு நடத்துகிறார். பின்னர், ஐ.ஐ.டி.யில் உள்ள மூளை ஆராய்ச்சி மையத்தைப் பார்வையிடுகிறார். இதைத்தொடர்ந்து, ஐ.ஐ.டி. வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் பங்கேற்கும் பிரதமர்மோடி, தமிழகத்தின்பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். இந்த நிகழ்ச்சியில் அவர் உரையாற்றுகிறார். மேலும், நிறைவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.



முன்னதாக, ஐ.ஐ.டி. வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இசையமைப்பாளர் இளையராஜாவின் இசைப் பயிற்சி மையத்தையும் பிரதமர் திறந்து வைக்கிறார். அங்கு நிகழ்ச்சிகளை முடித்த பிறகு, பிரதமர் மோடி நந்தம்பாக்கம் செல்கிறார். அங்கு மதியம் 3 மணியளவில் நடைபெறும் ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியின் பொன்விழாவில் பங்கேற்று உரையாற்றுகிறார். இதைத்தொடர்ந்து,அங்கிருந்து கார் மூலம் விமான நிலையத்துக்குச் செல்லும் பிரதமர் மோடி, அங்கிருந்து டெல்லிக்கு புறப்படுகிறார்.

சென்னையில் பிரதமர் மோடி பங்கேற்கும் நிகழ்ச்சிகளை முன்னிட்டு, அவர் செல்லும் வழித் தடங்களில் பலத்தபாதுகாப்புஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன. சென்னை விமான நிலையத் தில் இருந்து போரூர் மெட்ரோரெயில்நிலையம்வரையிலும்,அங்கிருந்து சென்னை ஐ.ஐ.டி. வரையிலும், பின்னர் ஐ.ஐ.டி. யில் இருந்து நந்தம்பாக்கம் செல்லும் வழித்தடத்திலும் தமிழக பா.ஜனதா சார்பில் பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, இந்த வழித்தடங்களில் 2 இடங்களில் பிரதமர் மோடி ரோடு ஷோ நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னை விமான நிலையத்திலும் அவருக்கு வரவேற்பு அளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## இந்திய போர்க்கப்பல் ஐ.என்.எஸ். சக்யாத்ரி ரஷியா சென்றடைந்தது



மாஸ்கோ, அக். 11

இந்திய கடற்படையின் அதிநவீன உள்நாட்டு ஸ்டெல்த் போர்க்கப்பலான ஐ . என் . எ ஸ் . சக்யாத்ரி,ரஷியாவின் முக்கிய கடலோர நகரான விளாடிவோஸ்டாக் துறைமுகத்தை சென்றடைந்தது. கூட்டு கடற்படை பயிற்சிஇந்தியா மற்றும் ரஷியா ஆகிய இரு நாட்டு கடற்படைகளுக்கு இடையே ‘இந்த்ரா 2026’ என்ற இருதரப்பு கூட்டு கடற்படை பயிற்சி நடைபெற உள்ளது. இந்த கூட்டு பயிற்சியில் பங்கேற்பதற்காகவே இந்திய போர்க்கப்பல் ரஷியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளது.உற்சாக வரவேற்புவிளாடிவோஸ்டாக் துறைமுகத்தின்33வது கப்பல்தளத்தில் வந்து நின்ற இந்திய போர்க்கப்பலுக்கு ரஷிய கடற்படை சார்பில் மிக உற்சாகமான முறையில் பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. ரஷிய பாரம்பரிய வழக்கப்படி ரொட்டி மற்றும் உப்பு வழங்கி இந்திய கடற்படை வீரர்களைவரவேற்றனர். ரஷிய பசிபிக்கடற்படை பிரிவின் கமாண்டர் அலெக்ஸி உல்யனென்கோ, இந்திய வீரர்களை நேரில் சந்தித்து தனது வாழ்த்துகளையும், வரவேற்பையும் தெரிவித்தார்.அதிநவீன தொழில்நுட்பம்உள்நாட்டிலேயே கட்டப்பட்ட இந்த 'ஐ.என்.எஸ். சக்யாத்ரி' போர்க்கப்பல், எதிரிகளின் ரேடார்களில் எளிதில் சிக்காத 'ஸ்டெல்த்' தொழில்நுட்பம் கொண்டது.இந்த்ரா2026வருகிற அக்டோபர் 13ஆம் தேதி இந்த ‘இந்த்ரா2026’ கூட்டுப் பயிற்சியின் அதிகாரப்பூர்வ தொடக்க விழா நடைபெற உள்ளது. ஜப்பான் கடற்பகுதியில் இரு கட்டங்களாக (கரைப்பகுதி மற்றும் கடல் பகுதி) இந்த கூட்டுப் பயிற்சிகள் தீவிரமாக நடைபெற உள்ளன.

## பிரேசில்: பள்ளிக்குழந்தைகளை பணய கைதிகளாக பிடித்து மிரட்டல் விடுத்த நபர் சுட்டுக்கொலை



பிரேசிலா, அக். 11

பிரேசிலில் பள்ளிக்குழந்தைகளை பணய கைதிகளாக பிடித்து கொலை மிரட்டல் விடுத்த நபரை போலீசார் சுட்டுக்கொன்றனர்.பணய கைதிகளாக பள்ளிக்குழந்தைகள்தென் அமெரிக்காவில் அமைந்துள்ள நாடு பிரேசில். அந்நாட்டின் பரானா மாகாணம் சவோ பகுதியில் ஆரம்பப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் இன்று மதியம் குழந்தைகள் வகுப்பறைகளில் கல்வி கற்றுக்கொண்டிருந்தன. அப்போது பள்ளிக்குள் புகுந்த நபர், 13 குழந்தைகளை பணய கைதிகளாக பிடித்து வைத்தார். 13 குழந்தைகளை ஒரு அறைக்குள் அடைத்து வைத்து அந்த அறை முழுவதும் தான் கொண்டுவந்த பெட்ரோலை ஊற்றி தீ வைத்துவிடுவதாக மிரட்டினார்.இதையடுத்து விரைந்து சென்ற போலீசார், ராணுவத்தினர் குழந்தைகளை பணய கைதிகளாக பிடித்து வைத்திருந்த கடத்தல்காரரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். ஆனால், குழந்தைகளைவிடுதலை செய்ய அந்த நபர் முன்வராததையடுத்து பள்ளிக்குள் அதிரடியாக நுழைந்த ராணுவத்தினர் 13 குழந்தைகளையும் அதிரடியாக மீட்டனர். மேலும், குழந்தைகளை பணய கைதிகளாக பிடித்து வைத்திருந்த நபரை சுட்டுக்கொன்றனர். சுட்டுக்கொல்லப்பட்ட நபரின் பெயர் உள்ளிட்ட எந்த விவரத்தையும் அதிகாரிகள் வெளியிடவில்லை.

## உக்ரைன் மீது ரஷியா தாக்குதல் 11 பேர் பலி



மாஸ்கோ, அக். 11

உக்ரைன் மீது ரஷியா நடத்திய தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

உக்ரைன் , ரஷியா போர் 4 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆயுதம் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றன. அதேவேளை, பேச்சுவார்த்தை மூலம் போரை நிறுத்த இந்தியா, சீனா உள்பட பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. ஆனாலும், இரு நாடுகளுக்கும் இடையே போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

## தாராபுரம், மதுராந்தகம் தொகுதிகளில் த.வெ.க. வேட்பாளர்கள் வெற்றி - திருவொற்றியூரில் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கிக் கொண்டாட்டம்



தாராபுரம் தொகுதியில் சத்தியபாமா மற்றும் மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேல் ஆகிய தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, திருவொற்றியூரில் தமிழக வெற்றிக் கழகத்தினர் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கிக் கொண்டாடினர். திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்ற இந்தக் கொண்டாட்டத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தினர் கலந்து கொண்டனர். அப்போது பட்டாசுகள் வெடித்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.மேலும், பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் பயணம் செய்த பொதுமக்களுக்கும், சாலையில் சென்றவர்களுக்கும் இனிப்புகள் வழங்கி வெற்றியைக் கொண்டாடினர்.இந்த நிகழ்ச்சியில் பகுதி செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், இளைஞரணியினர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

## ஆறுபூத மருத்துவ அற்புதம்' நூல் வெளியீடு! புதுச்சேரி ஆளுநர் கைலாசநாதர் வெளியிட்டார்!!



பேராசிரியர் டாக்டர் ஆதி ஜோதி பாபு எழுதிய ‘ஆறுபூத மருத்துவ அற்புதம்’ என்ற மருத்துவ நூல் வெளியீடு, அண்மையில் புதுச்சேரி ஆளுநர் மாளிகையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில், புதுச்சேரி ஆளுநர் கைலாசநாதர் கலந்து கொண்டு, ‘ஆறுபூத மருத்துவ அற்புதம்’ நூலை வெளியிட்டார். நூலாசிரியர் பேராசிரியர் டாக்டர் ஆதி ஜோதி பாபு மற்றும் மருத்துவத் துறையைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். இந்நிகழ்வில் டாக்டர் பா. பவித்ரா பாபு, டாக்டர் ஞா. பா. அருண், டாக்டர் பா. சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர். பேராசிரியர் டாக்டர் ஆதிஜோதிபாபு, இந்தியக் கண்டுபிடிப்பாளராகவும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் காப்புரிமைகள் (Patent) பெற்றவராகவும் விளங்கி வருகிறார். மேலும், இந்தியா, ஆசியா மற்றும் உலக சாதனைப் பதிவுகளில் இடம்பெற்றுள்ள சாதனையாளராகவும் அவர் குறிப்பிடத்தக்கவர். ‘ஆறுபூத மருத்துவ அற்புதம்’ நூல் மருத்துவம் சார்ந்த புதிய கருத்துகளையும் அணுகுமுறைகளையும் எடுத்துரைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. நூல் வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்றவர்கள், நூலாசிரியரின் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

## திருவான்மியூரில் (OMR) சாலையில் பள்ளம் - விரைந்து சென்று உடனடியாக ஆய்வை மேற்கொண்ட அமைச்சர் குமார்



சென்னை ஓஎம்ஆர் சாலை, திருவான்மியூர் டைடல் பார்க் அருகே மெட்ரோ பணிகள் நடைபெறும் பகுதியில் ஏற்பட்ட பள்ளத்தில் கார் சிக்கியதாக தகவல் அறிந்த அமைச்சர் குமார் அவர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

பள்ளத்தை உடனடியாக சீரமைக்கவும், போக்குவரத்து நெரிசலை சரிசெய்யவும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், பொதுமக்களின்பாதுகாப்பைஉறுதிசெய்ய தடுப்புகள், எச்சரிக்கை பலகைகள் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு,

இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாத வகையில் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க உத்தரவிட்டார்.

அமைச்சரின் உடனடி நடவடிக்கைக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

## விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தக் தவறிய மத்திய மாநில அரசுகளை கண்டித்து திருவொற்றியூரில் மாதர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்!




திருவொற்றியூர் அஜாக்ஸ் பேருந்து நிலையம் அருகே, அனைத்து இந்திய ஜனநாயக மாதர் சங்கத்தின் திருவொற்றியூர் – எண்ணூர் பகுதிக்குழு சார்பில், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயர்வைக் கண்டித்து 50க்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இந்த ஆர்ப்பாட்டத்திற்குத் திருவொற்றியூர் – எண்ணூர் பகுதிக்குழு துணைத்தலைவர்கே.கே.புஷ்பாதலைமை தாங்கினார். மாவட்டச் செயலா

ளர் எஸ். பாக்கியம், பகுதிச் செயலாளர் அலமேலு, மாநிலக்குழு உறுப்பினர் கீதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் கடுமையாகப் பாதிக்கப்

பட்டுள்ளதாகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். கடந்த நான்கு மாதங்களில் அரிசியின் விலை மூட்டை ஒன்றுக்கு ரூ.600 வரை உயர்ந்துள்ளதாகக் குற்றம்சாட்டினர். மேலும், அடுத்த மாதம் தீபாவளிப் பண்டிகை வரவுள்ள நிலையில், உணவுப் பொருட்களின் விலை உயர்வு பொதுமக்களின் குடும்பச் செலவுகளை அதிகரிக்கும் என்றும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள்உரியநடவடிக்கைஎடுக்கவில்லை என்றும் கண்டனம் தெரிவித்தனர்.தமிழக அரசு பொதுமக்களின் நலனில் அக்கறை செலுத்தாமல் இடைத்தேர்தலுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் மாதர் சங்கத்தினர் குற்றம்சாட்டினர்.இந்தப் போராட்டத்தில், பெண்கள் அரிசி, பருப்பு, எண்ணெய், ரவை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களையும் காய்கறிகளையும் மாலையாக அணிந்து நூதன முறையில் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். தொடர்ந்து, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தத் தவறிய மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

தின கனி
11.10.2026

# மருத்துவமனைகளில் சேவையின் தரம், அவசர சிகிச்சை வசதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் வானதி சீனிவாசன்



சென்னை, அக். 11

மருத்துவமனைகளில் மருத்துவச் சேவையின் தரம், அவசர சிகிச்சை வசதிகள் மற்றும் மருத்துவர்களின் பொறுப்புணர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது: கோவை தெலுங்குபாளையம்அரசுஆரம்பசுகாதார நிலையத்தில் நேற்று பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் சென்ற கர்ப்பிணிப் பெண் உயிரிழந்ததாக வெளியாகியுள்ள செய்தி மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. ஒரு குடும்பத்தின் நம்பிக்கையாக இருந்த தாயின் உயிரும், உலகைக் காண வேண்டிய குழந்தையின் உயிரும் பறிபோனதாகக் கூறப்படும் இந்தச் சம்பவம் சாதாரணமான ஒன்றல்ல. மருத்துவம் என்பது உயிரைக் காக்கும் உன்னதமான சேவை. ஆனால், மருத்துவச் சிகிச்சையில் அலட்சியம் காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டிருந்தால், அதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.எனவே, இந்தச் சம்பவம் குறித்து மாவட்ட நிர்வாகமும் சுகாதாரத் துறையும் உடனடியாகத் தலையிட்டு, நேர்மையான விசாரணை நடத்த வேண்டும். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், விசாரணையின் அடிப்படையில்உரியசட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உரிய இழப்பீடும் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட வேண்டும்.இனி இதுபோன்றதுயரச்சம்பவங்கள்நிகழாமல்இருக்கஅரசு மருத்துவமனைகளிலும் தனியார் மருத்துவமனைகளிலும் மருத்துவச் சேவையின் தரம், அவசர சிகிச்சை வசதிகள் மற்றும் மருத்துவர்களின் பொறுப்புணர்வு உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# இடதுசாரிகள் மீதான தாக்குதலை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சிகள் அழைப்பு

சென்னை, அக். 11

டில்லியில் காவல்துறை துணை ராணுவப்படை அராஜகம்! இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் கைது முன்னணி ஊழியர்கள் மீது தாக்குதல்கள்! மாவட்ட தலைநகரங்களில் கண்டன இயக்கங்கள் நடத்திட இடதுசாரிக் கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளது. இதுதொடர்பாக,கம்யூனிஸ்ட்கட்சிகள்வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவித்ததாவது:ஐந்தர் மந்தர் போராட்டம்தலைநகர் டெல்லியில் காவல்துறை, துணை ராணுவப்படையினர் கடுமையான அடக்குமுறையில் ஈடுபட்டுள்ளனர். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்யக் கோரி இன்று புதுதில்லியில் கரப்பான் பூச்சி ஜனதா சுட்சி சார்பில் ஐந்தர் மந்தரில் போராட்டத்திற்கு அறைகூவல் விடுக்கப்பட்டிருந்த பின்புலத்தில் கைது வேட்டையும், தாக்குதல்களும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. கரப்பான் பூச்சி ஜனதா கட்சி போராட்டத்திற்கு இடதுசாரிக் கட்சிகளும் வெகுஜன அமைப்புகளும் ஆதாவை தெரிவித்து இருந்தன. செவிமடுக்கப்படவில்லைடெல்லிக்கான 254 ரெயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. 54 மெட்ரோ ரெயில் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. 35000 காவல்படையினர்குவிக்கப்பட்டுள்ளனர்.அமைதியான முறையில் போராட்டம் நடத்த உரிமை உண்டு என்ற சுப்ரீம் கோர்ட்டு அறிவுரை கூட செவிமடுக்கப்படவில்லை.முக்கிய தலைவர்கள் கைதுஇந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் டி.ராஜா மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (எம்.எல்) லிபரேசன் கட்சி தலைவர்களும், முன்னணி ஊழியர்களும் டெல்லியில் கைதாகி உள்ளனர். இடதுசாரி வாலிபர். மாணவர், அமைப்புகளின் தலைவர்கள், முன்னணி ஊழியர்களும் கைதாகி உள்ளனர். கைது செய்யப்பட்டவர்களை சில மணி நேரங்களாக காவல் வாகனத்தில் வைத்து கொண்டே சற்றி வருகிறார்கள்.கண்டனம்ஜந்தர்மந்தர் பகுதியில் மத்திய அரசின் டில்லி போலீசார் மற்றும்



துணை ராணுவப் படையினர் கடுமையான அடக்குமுறைகளை ஏவி விட்டுள்ளனர். போராட்டக்காரர்களைஒன்றுசேரவிடாமல்ஆங்காங்கே கைது செய்துள்ளனர். கட்சி, வெகுஜன அமைப்பு அலுவலகங்கள் துணை ராணுவ படையாலும், மத்திய அரசின் காவல்துறையினாலும் முற்றுகையிடப்பட்டுள்ளன. ஜனநாயக மறுப்பின் உச்சகட்டமாக அரங்கேற்றப்பட்டுள்ள இத்தகைய தாக்குதல்களை இடதுசாரிக் கட்சிகள் வன்மையாக கண்டிக்கின்றன.மாவட்ட தலைநகரங்கள்இந்த அடக்குமுறை, கைதை கண்டித்தும், ஞானேஷ் குமார் பதவி நீக்கத்தை வலியுறுத்தியும் தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் ஆங்காங்கே இடதுசாரிக் கட்சிகள் சார்பில் உடனடியாக கண்டன இயக்கங்கள் நடத்திட இடதுசாரி கட்சிகளின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.சிபிஐ(எம்), சிபிஐ, சிபிஐ(எம். எல்) லிபரேசன் இடதுசாரி கட்சிகளின் கூட்டறிக்கை டில்லியில் காவல்துறை துணை ராணுவப்படை அராஜகம்! இடதுசாரிக் கட்சித் தலைவர்கள் கைது முன்னணி ஊழியர்கள் மீது தாக்குதல்கள்! மாவட்ட தலைநகரங்களில் கண்டன இயக்கங்கள் நடத்திட இடதுசாரிக் கட்சிகள் வேண்டுகோள்! https://t.co/LKwCEfb8Mj— Shanmugam P (@Shanmugamcpim) October 10, 2026

# டெல்லியில் ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கிறது மத்திய அரசு! சு.வெங்கடேசன் எம்.பி.



சென்னை, அக். 11

கைது செய்யப்பட்ட அனைத்துத் தலைவர்களையும், மாணவர்களையும், போராட்டக்காரர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என சு. வெங்கடேசன் எம்.பி. வலியுறுத்தி உள்ளார். ஐந்தர் மந்தர் போராட்டம்இது தொடர்பாக, மதுரை நாடாளுமன்ற தொகுதியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பி. சு.வெங்கடேசன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது ;தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரைப் பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, புதுடெல்லி ஜந்தர் மந்தரில் இன்று நடைபெறவிருந்த போராட்டத்தைத் தடுக்க, டெல்லி காவல்துறையும் துணைராணுவப்படையினரும்கட்டவிழ்த்துவிட்டுள்ள அடக்குமுறைகள் கடும் கண்டனத்திற்குரியவை. ஜனநாயகத்தில் அரசிடம் கேள்வி கேட்பதும், தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகளை விமர்சிப்பதும், தங்களது கோரிக்கைகளுக்காக அமைதியாகப் போராடுவதும் மக்களின் அரசியலமைப்புச் சட்ட உரிமைகள். அந்த உரிமைகளைப் பயன்படுத்த முன்வரும் மாணவர்கள், இளைஞர்கள், அரசியல் கட்சியினர் ஆகியோரை ஆங்காங்கே கைது செய்வதும், கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகங்களை முற்றுகையிடுவதும் ஜனநாயகத்தின் அடிப்படைகளையே கேள்விக்குள்ளாக்குகின்றன. தலைவர்கள் கைதுஇந்தப் போராட்டத்தில் பங்கேற்கச் சென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் எம்.ஏ. பேபி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் டி. ராஜா, அரசியல் தலைமைக்குழு உறுப்பினர்கள் தோழர் பினராயி விஜயன், தோழர் உ. வாசுகி, தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பெ. சண்முகம், மத்தியக்குழு உறுப்பினர் தோழர் ஜான் பிரிட்டாஸ் எம்.பி. உள்ளிட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் . கைது செய்யப்பட்ட தலைவர்களை ஒரு மணி நேரத்திற்கும் மேலாகக் காவல்துறை வாகனத்திலேயே வைத்துச் சுற்றி வருகின்றனர் . சி. ஜே.பி. தலைவர் அபிஜித் தீப்கே விமானத்திலேயே கைது செய்யப்பட்டிருப்பதும் அதிர்ச்சியளிக்கிறது. எதிர்க்கட்சிகளின் குரலை ஒடுக்குவதன் மூலம் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியாது. கேள்வி கேட்பவர்களைக் கைது செய்வதன் மூலம் தேர்தல் ஆணையர் செய்த குற்றத்திலிருந்து தப்பிக்க முடியாது. உடனடியாக விடுதலை செய்ககருத்துச்சுதந்திரத்தையும் அமைதியான போராட்ட உரிமையையும் மதிக்க வேண்டிய மத்திய அரசு, காவல்துறை மற்றும் துணை ராணுவப் படையினரைப் பயன்படுத்தி அரசியல் எதிர்ப்பைக் கட்டுப்படுத்த முயல்வது கண்டனத்திற்குரியது . கைது செய்யப்பட்ட அனைத்துத் தலைவர்களையும், மாணவர்களையும், போராட்டக்காரர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.ஜனநாயகத்தின் குரலை அடக்க நினைப்பவர்கள் வரலாற்றின் முன் பதில் சொல்ல வேண்டியிருக்கும். போராட்டங்களை ஒடுக்குவதால் மக்களின் கேள்விகளையும் உரிமைக் குரல்களையும் ஒருபோதும் ஒழித்துவிட முடியாது.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும்: மு.வீரபாண்டியன்

சென்னை, அக். 11

போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:சர்வாதிகார போக்கோடு செயல்பட்டு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் என்ற பெயரில் 13 கோடி மக்களின் பெயரை வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கிய, இந்தியத் தலைமை தேர்தல் ஆணையரை உடனடியாக பதவி நீக்கம் செய்ய வேண்டும் என வலியுறுத்தி டெல்லி ஜந்தர்மந்தரில், இடதுசாரி அமைப்புகள், கரப்பான்பூச்சி ஜனதா கட்சி உட்பட பல்வேறு அமைப்புகள் சார்பில் போராட்டம் நடைபெற்று வருகிறது. இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.இதே கோரிக்கையை வலியுறுத்தி இன்று சென்னையிலும் அனைத்திந்திய மாணவர்பெருமன்றம், இளைஞர்பெருமன்றம்மறியல் போராட்டத்தை அண்ணாசாலை பெரியார் சிலை அருகில் நடத்தியது. அனைத்திந்திய இளைஞர் பெருமன்றமாநிலச்செயலாளர்க.பாரதி,அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநிலத் தலைவர், க.இப்ராகிம், ஆ.மணிகண்டன், ர.சௌமியா உட்பட, இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட ஏராளமான மாணவர்கள்,இளைஞர்கள்கைதுசெய்யப்பட்டுள்ளனர். உடனடியாக கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுவிக்க வேண்டும். காவல்துறை தாக்குதலால் காயமடைந்துள்ள மாணவர்களுக்கு உடனடியாக சிகிச்சை வழங்கிட ஏற்பாடு செய்திட வேண்டும் என, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்தி கேட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மாணவ மாணவிகளுக்கு ஏற்றத்தாழ்வு ஏற்படாத வகையில் கலைஞர் கொண்டு வந்த சமச்சீர் திட்டத்தை தவெக அரசு கடைபிடிக்க வேண்டும் மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் கோரிக்கை

ஆட்சிகள் மாறலாம் ஆனால் பள்ளி கல்லூரிகளில் தரம் மாறக்கூடாதுஇந்தியாவிலே கல்வியில் முதல் மாநிலமாக திகழ்வது தமிழ்நாடு தான் இதற்கு காரணம் திமுக ஆட்சி என பெருமிதம்நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி முழுவதுமே 90 சதவீதம் பள்ளி கல்லூரி சமுதாய நல கட்டிடங்கள் கட்டுவதற்கு செயல்படுத்தப்பட்டுள்ளன இதனை தவெக அரசு தொடரவேண்டும்எனகோரிக்கைசென்னைமணலியில் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 1.50 கோடி செலவில் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகள் கட்டிடத்தை மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி விராசாமி திறந்து வைத்தனர் நிகழ்ச்சியில் தவெக சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் திமுகவை சேர்ந்த மாநகராட்சி மண்டல குழு தலைவர் ஆறுமுகம் மாநகராட்சி அதிகாரிகள் பங்கேற்றனர் இதனை அடுத்து செய்தியாளர்களிடம்பேசியமாநிலங்களவைஉறுப்பினர் வில்சன்1.50கோடிசெலவில்நாடாளுமன்றமேம்பாட்டு நிதியிலிருந்து மாநகராட்சி பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளது தனியார் பள்ளிக்கு இணையாக மாநகராட்சி பள்ளி கட்டப்பட்டுள்ளது மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது முன்னாள் முதல்வர் மு க ஸ்டாலின் ஆட்சி காலத்தில் மக்கள் பயன்படும் விதமாக மாணவ மாணவியர்களுக்கு கல்வியை அளிக்கும் வகையில் நாடாளுமன்ற மேம்பாட்டு நிதி நல்லதொரு விஷயங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது இந்த நிகழ்ச்சியில் திருவொற்றியூர் தவெக சட்டமன்ற உறுப்பினர் பங்கேற்று எங்களுடன் தோளோடு தோள் நின்று திறப்பு விழாவிற்கு கூட இருந்தது மகிழ்ச்சியாக இருக்கிறது இதுபோன்று மக்களுக்கு பயன் தரும் விஷயங்களில் நிச்சயமாக திராவிட முன்னேற்ற கழகம் என்னைக்குமே சலிக்காது மாணவ மாணவியரிடையே ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதற்காகவே மாநகராட்சி பள்ளிகள் தனியார் பள்ளிகளுக்கு நிகராக கட்டப்பட்டுள்ளது தனியார் பள்ளிக்கும் மாநகராட்சி பள்ளி மாணவ மாணவர்களுக்கும் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்பதற்காகவே மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் சமச்சீர் கல்வி திட்டத்தை கொண்டுவந்துள்ளார் இதுவரை தமிழ்நாட்டிலே எல்லோருக்கும் ஒரே கல்வி என்று திட்டத்தை இன்று வரை செயல்படுத்தப்பட்டு வருகிறது நிச்சயமாக இந்த ஆட்சியாளர்களும் அதை கடைப்பிடிப்பார்கள் என்று நம்புகிறோம் என்று தெரிவித்தார்நிகழ்ச்சியில் பேசிய மாநகராட்சி மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்கள் இடையே ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது என்பதற்காக தனியார் பள்ளிகளை போன்று தரமாக இருக்க வேண்டும் என்பதின் அடிப்படையில் மாநகராட்சி பள்ளிகள் கட்டப்பட்டு வருகின்றன பாராளுமன்ற நிதியை பொருத்தவரைக்கும் 90 சதவீதம் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது திமுக ஆட்சியில்



சிபிஎஸ்இ பள்ளியை விட மாநகராட்சி பள்ளிகள் தரம் உயர்ந்து கிரானைட் மார்பல் கற்கள் பதிக்கப்பட்டு நவீன வசதிகளுடன் அதிக மாநகராட்சி பள்ளிகள் கட்டப்பட்டன அதே போன்று எதிர் கட்சி தலைவர் அப்பொழுது துணை முதல்வராக இருந்த பொழுது கூட அவருடைய தொகுதியில் சமுதாய நலக்கூடங்கள் பள்ளிகள் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வந்தன அதுபோன்ற வேலைகளை இந்த அரசும் செய்வார்கள் என்றுநம்பிக்கையோடுஇருக்கின்றேன்ஆட்சிமாறலாம் ஆனால் பள்ளி கல்லூரியின் தரம் மாறக்கூடாது மாணவ மாணவிகளுக்கு எந்த விதத்திலும் ஏற்றத்தாழ்வு மனப்பான்மை வரக்கூடாது என்பதற்காக தான் இந்த சமச்சீர் கல்வியை தலைவர் கலைஞர் கொண்டு வந்து இன்று வரைக்கும் நாம் கடைப்பிடித்து வருகிறோம் இனி இதைத் தொடர்ந்து நீடிக்க வேண்டும் இந்த ஆட்சியாளர்கள் கடைபிடிக்க வேண்டும் இதுபோன்ற விழாக்களில்தவெகசட்டமன்றஉறுப்பினர்பங்கேற்பது பெருமைப்படுத்துவது உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது தோளோடு தோள் கொடுத்து இது மக்களுடைய திட்டம் மக்கள் பயனடைய வேண்டியது திட்டங்கள்ஒருங்கிணைத்துசெயல்படுவதுஎதிர்க்கட்சித் தலைவரின் கனவு நினைவாக இருக்கிறதுஇதேபோன்று திருவொற்றியூர்சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி மூலமாக பள்ளிகளுக்கு முன்னுரிமை கொடுத்து செயல்படவேண்டும்அதற்குபாராளுமன்றமேம்பாட்டு நிதி ஒதுக்க தயார் தனியார் பள்ளிக்கு இணையாக மாநகராட்சி நிர்வாகம் பள்ளிகளை கட்டியுள்ளதற்கு பெருமைப்படுகின்றோம் பள்ளி முழுவதுமே பாராளுமன்ற மேம்பாட்டு நிதி செயல்படுத்தப்பட்டுள்ளது நுழைவாயில் முன்பு கட்டிடம்வரைகட்டப்பட்டுள்ளதுமாணவமாணவர்கள் தனியார் பள்ளியில் படிக்கவில்லையே என்ற ஏற்றத்தாழ்வு ஏற்படக்கூடாது என்பதற்காக தனியார் பள்ளிகளுக்கு இணையாக தரத்தில் இணையாக மாநகராட்சி பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளது இந்தியாவிலேயே தமிழகம் தான் கல்வியில் மிகச்சிறந்த மாநிலமாக திகழ்கிறது அதுக்கு வழி வகுத்தது திமுக ஆட்சி அதனை தொடர்ந்து இந்த ஆட்சியாளர்கள் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்

# மயிலாடுதுறையில் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் முன்னாள் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாஸின் பிறந்த நாளை முன்னிட்டு தனியார் திருமண மண்டபத்தில் இலவச பொது மருத்துவ முகாம்

மயிலாடுதுறையில் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் முன்னாள் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாஸின் பிறந்த நாளை முன்னிட்டுதனியார்திருமண மண்டபத்தில்இலவசபொது மருத்துவ முகாம் நடைபெற்றது.




பாட்டாளி மக்கள் கட்சியின்தலைவர்முன்னாள் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மருத்துவர் அன்புமணி ராமதாஸில் பிறந்த நாளை முன்னிட்டு மயிலாடுதுறை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது மாவட்டத் தலைவர் சித்தமல்லி பழனிச்சாமி தலைமையில் நடைபெற்ற மருத்துவ முகாம் நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியில் நிர்வாகிகள் கலந்து கொண்டனர் இந்த சிறப்புமருத்துவமுகாமில்பொதுமக்கள்ஏராளமானோர் வருகை புரிந்து மருத்துவ சேவையினை பெற்றுக் கொண்டனர்.

மருத்துவ முகாமில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சைமருத்துவம்,எலும்புமற்றும்மூட்டுமருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், புற்றுநோய் மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், ரத்த அழுத்தம் மருத்துவம், மகளிர் மற்றும் மகப்பேறு மருத்துவம், பல் மருத்துவம் உள்ளிட்ட சிறப்பு மருத்துவர்களை கொண்டு முகாம் நடைபெற்றது.

# மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா செம்பனார்கோவில் அண்ணா திருமண மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழா

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா செம்பனார்கோவில் அண்ணா திருமண மண்டபத்தில் சமுதாய வளைகாப்பு விழா நடந்தது. விழாவில் கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டது. செம்பனார் கோவிலில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகள் துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா நடந்தது. பூம்புகார் எம்.எல்.ஏ. நிவேதா முருகன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மாவட்ட திட்ட அலுவலர் பிரபா ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை பொருட்களை வழங்கினர். நிகழ்ச்சியில் செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 100 கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளையல் காப்பு விழா நடத்தப்பட்டது. தொடர்ந்து கர்ப்பிணி பெண்களுக்கு 5 வகையான சாதம், தாம்பூலத்தில் புடவை, மங்களப் பொருட்கள், பூமாலை ,வளையல் மற்றும் இனிப்புகளை பூம்புகார் எம்.எல்.ஏ. நிவேத முருகன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மாவட்ட திட்ட அலுவலர் பிரபா ஆகியோர் வழங்கினர். இதில் தி.மு.க. ஒன்றிய செயலாளர் அன்பழகன், மாவட்ட துணைச் செயலாளர் ஞானவேலன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் ஸ்ரீதர், மற்றும் த.வே.க. நிர்வாகிகள், குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் கிருத்திகா, மருத்துவ அலுவலர் தீக் ஷிதா,வட்டார சுகாதார மேற்பார்வையாளர் வெங்கடேசன்,அங்கன்வாடி பணியாளர்கள், அரசு அலுவலர்கள், கர்ப்பிணிப் பெண்களின் உறவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கைதி தப்பியோடிய விவகாரம்: ஆயுதப்படை போலீசார் 3 பேர் பணியிடை நீக்கம்



நாகர்கோவில், அக். 11

புதுக்கோட்டையை சேர்ந்த கைதி தப்பியோடிய விவகாரத்தில் பாதுகாப்பு பணியில் இருந்த ஆயுதப்படை போலீசார் 3 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கைதி தப்பியோட்டம்புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்தவர் தீபன்ராஜ் (வயது36),தற்போதுகுமரிமாவட்டம் திக்குறிச்சி அருகே வசித்து வருகிறார். இவர் மீது மார்த்தாண்டம் அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் போக்சோ வழக்கு உள்ளது. இந்த வழக்கில் தீபன்ராஜை போலீசார் கைது செய்து கோர்ட்டில் ஆஜர்படுத்தினர். ஆனால் அப்போது அவருக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் சிகிச்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.கடந்த ஒரு வாரமாக சிகிச்சையில் இருந்த அவர் நேற்று முன்தினம் காலையில் கழிவறைக்கு செல்ல வேண்டும் என்று கூறினார். இதையடுத்து போலீசார் அவரைகழிவறைக்கு அழைத்து சென்றபோது போலீசாருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு தப்பியோடி விட்டார்.தேடுதல் வேட்டைஇதனால் அதிர்ச்சி அடைந்த போலீசார் உடனே கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவித்து தப்பியோடிய தீபன்ராஜை வலை வீசி தேடினர். போலீசாரின் தீவிர தேடுதல் வேட்டையில் தீபன்ராஜ் இரவு 7 மணி அளவில் இரணியல்பகுதியில்வைத்து போலீசாரிடம் சிக்கினார். ஆஸ்பத்திரியில் இருந்து புறப்பட்டதீபன்ராஜ்நடந்தே சென்றுள்ளார். முதற்கட்ட தகவலில் அவர் வீட்டுக்கு செல்ல முயற்சி செய்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்ததன் மூலம் அவர் செல்லும் திசையை போலீசார் கண்டறிந்து கைது செய்தனர். தற்போது அவரை ஆசாரிபள்ளம் போலீஸ் நிலையத்தில் வைத்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். பணியிடை நீக்கம்இந்தநிலையில்கைதிதப்பிஓடியதால் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படை போலீஸ்காரர்கள் சசிகுமார், ராமஜெயம் மற்றும் வினோத் குமார் ஆகிய 3 பேர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது 3 பேரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

# 14 மாவட்டங்களில் இரவு 7 மணி வரை மழைக்கு வாய்ப்பு



சென்னை, அக். 11

சுமார்0.9கி.மீ.உயரத்தில்குமரிக்கடல் பகுதிகளிலிருந்து வடக்கு உள் கர்நாடகா வரை தமிழகம் மற்றும் தெற்கு உள் கர்நாடகா வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது. இதன் காரணமாக இன்று தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.இந்த நிலையில் தமிழகத்தில் 14 மாவட்டங்களில் இன்று இரவு 7 மணி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.அதன்படி கன்னியாகு மரி, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், தென்காசி, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி,ராமநாதபுரம்,சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் போராட்டத்திற்கு ஆதரவா? அமைச்சர் நிர்மல் குமார் பதில்



சென்னை, அக். 11

இந்திய தலைமை தேர்தல் ஆணையாளர் ஞானேஷ் குமார்,மற்றஇருஆணையாளர்களின்ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளாமல் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணியில் தன்னிச்சையாக செயல்பட்டதாக புகார்கள் எழுந்தன. இதனையடுத்து ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் எனக்கோரி, பல்வேறு அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஜந்தர் மந்தர்இந்த நிலையில், டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் இன்று போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். எனினும், போலீசார் இதற்கு அனுமதி மறுத்துள்ளனர். வன்முறை எதுவும் பரவாமல் தடுப்பதற்காக பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. சென்னையில் போராட்டம்டெல்லி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், சென்னையின் பெசன்ட் நகர் பகுதியில் கரப்பான் பூச்சி ஜனதா கட்சி சார்பில் போராட்டம் நடத்தப்பட்டது. இதற்கு போலீசாரின் முன்அனுமதி பெறப்படவில்லைஎன்றுகூறப்படுகிறது. அவர்களை கலைந்து செல்லும்படி போலீசார் அறிவுறுத்தினர். அவர்களுடன் பேச்சுவார்த்தையும் நடத்தினர்.எனினும், அதில் சமரசம் ஏற்படவில்லை. கலைந்து செல்ல மறுத்த அவர்கள் தொடர்ந்து கோஷம் எழுப்பி, போராட்டத்தில் ஈடுபட்டனர். சாலையில் அமர்ந்து தர்ணா போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து அவர்களை போலீசார் கைது செய்தனர். அவர்களை குண்டுக்கட்டாக தூக்கிச்சென்று போலீஸ் வாகனத்தில் ஏற்றினர். தொடர்ந்து கூடுதல் போலீசாரும் குவிக்கப்பட்டு உள்ளனர்.அமைச்சர் நிர்மல் குமார் பதில்இந்நிலையில், கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் போராட்டத்தை த.வெ.க. அரசு ஆதரிக்கிறதா? அல்லது எதிர்க்கிறதா? என அமைச்சர் நிர்மல் குமாரிடம் செய்தியாளர்கள் இன்று கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்தபோது அவர் கூறியதாவது;"எஸ்.ஐ.ஆர். விவகாரத்தில் த.வெ.க. அரசின் நிலைப்பாடு குறித்து தெளிவாக சொல்லி இருக்கிறோம். எஸ்.ஐ.ஆர். பணிகளை எதிர்த்து தமிழகம் முழுவதும் போராடிய ஒரே கட்சி தமிழக வெற்றிக் கழகம்தான். எஸ்.ஐ.ஆர். விவகாரம் குறித்து கேட்டால் கருத்து சொல்ல முடியும். ஆனால் ஒரு தனி அமைப்போ, அல்லது இயக்கமோ செய்யும் போராட்டத்திற்கு அரசு ஆதரவு கொடுக்க முடியாது. எல்லா இயக்கமும் எதை நோக்கி பயணிக்கிறார்கள் என்பது நமக்கு தெரியாது. இயக்கத்தின் பின்னால் இருந்து யாரும் இயக்குகிறார்களா? என்பது பற்றியும் நமக்கு தெரியாது. கடந்த முறை கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் டெல்லியில் நீட் தேர்வை முறையாக நடத்த வேண்டும் என்று போராட்டம் நடத்தினர். ஆனால் நாங்கள் நீட் தேர்வே வேண்டாம் என்று சொல்கிறோம். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.அவர்களுடைய கோரிக்கை பட்டியலில் பத்து விஷயங்கள் இருந்தால், அதில் ஏதேனும் ஒன்றுக்கு மட்டும்தான் நமக்கு உடன்பாடு இருக்கும். எனவே அவர்களின் அனைத்து போராட்டங்களுக்கும் நாம் ஆதரவு கொடுக்க முடியாது. கட்சி சார்பில் எங்கள் நிலைப்பாட்டை மட்டுமே நாங்கள் தெரிவிக்க முடியும்.எஸ்.ஐ.ஆர். பணிகளில் கண்டிப்பாக தவறு நடந்திருக்கிறது. தலைமை தேர்தல் ஆணையர் நிச்சயமாக ராஜினாமா செய்ய வேண்டும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் நடந்த தவறை சரிசெய்வதற்கு என்ன செய்ய வேண்டுமே அதைச் செய்ய வேண்டும். இந்த எஸ்.ஐ.ஆர். மட்டும் நடக்காமல் இருந்திருந்தால் இந்நேரம் த.வெ.க. 170 தொகுதிகளில் கண்டிப்பாக வெற்றி பெற்றிருக்கும்."இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கோத்தகிரி: குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த சிறுத்தையால் பொதுமக்கள் பீதி

நீலகிரி, அக்.11

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி குடியிருப்பு பகுதிக்குள் சிறுத்தை ஒன்று புகுந்தது. இதனால் அங்குள்ள பொதுமக்கள் பீதியில் உள்ளனர். குடியிருப்பு பகுதிக்குள் புகுந்த சிறுத்தைநீலகிரி மாவட்டம் கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகள் மலைகள் சூழப்பட்ட பகுதிகளாகும். எனவே இந்த மலைப்பகுதியில் யானை, மான், கரடி, சிறுத்தை போன்ற வனவிலங்குக்கள் அதிகம் உள்ளன. மேலும் இந்த விலங்குகள் கோடை காலத்தில் தண்ணீர் மற்றும் உணவு தேடி குடியிருப்பு பகுதிக்குள் வருவது வழக்கம். இந்த நிலையில் நேற்று (வெள்ளிக்கிழமை) கோத்தகிரி விநாயகர் கோவில் அருகே உள்ள குடியிருப்பு பகுதிக்குள் இருந்த ஒரு வீட்டிற்குள் சிறுத்தை ஒன்று புகுந்தது.தப்பியோடிய சிறுத்தைசிறுத்தை வருவதைக் கண்ட இரும்பு கூண்டிற்குள் இருந்த வளர்ப்பு நாய் கடுமையாக குரைக்கத்தொடங்கியது.நாய்கூண்டுக்குள்பாதுகாப்பாக இருப்பதையும், அதன் சத்தம் கேட்டு வீட்டின் உரிமையாளர்கள் விழித்துக் கொள்ளக்கூடும் என்பதையும் உணர்ந்த சிறுத்தை, அங்கிருந்து உடனடியாக ஓட்டம் பிடித்தது. இந்த முழு சம்பவமும் அங்கிருந்த சிசிடிவி கேமராவில் பதிவாகி, சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது. பொதுமக்கள் கோரிக்கைகோத்தகிரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சமீபகாலமாக சிறுத்தைகளின் நடமாட்டம் அதிகரித்து, செல்லப் பிராணிகளை வேட்டையாடும் சம்பவங்கள் தொடர்ந்து வருகின்றன. இதனால் வனத்துறையினர் இப்பகுதியில் தானியங்கி கூண்டுகளை வைத்து அச்சுறுத்தும் சிறுத்தையைப் பிடிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வைகை ஆற்றில் மணல் கடத்தல்: விரட்டிச் சென்று 3 பேரை மடக்கிப் பிடித்த போலீசார்

சிவகங்கை, அக். 11

மானாமதுரை பகுதியில் வைகை ஆற்றுப்படுகையில் அனுமதியின்றிமணல்அள்ளப்படுவதாகபோலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, போலீசார்சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று சோதனையில் ஈடுபட்டனர்.

போலீசாரைக் கண்டதும், அங்கிருந்த மர்ம கும்பல் ஜே.சி.பி. எந்திரம், லாரி மற்றும் மோட்டார் சைக்கிள்களில் தப்பி ஓட முயன்றது. இதையடுத்து, போலீசார் அவர்களை விரட்டிச் சென்றனர்.

அப்போது, ஜே.சி.பி. எந்திரத்தை விரட்டிச் சென்ற போலீசாருக்கு வழிவிடாமல், மோட்டார் சைக்கிளில் சென்ற 2 பேர் இடையூறு செய்தனர். இதையடுத்து, ஜே.சி.பி. ஓட்டுநர் மற்றும் மோட்டார் சைக்கிளில் சென்ற 2 பேர் இந்த சம்பவத்தில் மொத்தம் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், மணலுடன் தப்பிச் சென்ற லாரி மற்றும் அதன்ஓட்டுநரைபோலீசார்தீவிரமாகதேடிவருகின்றனர். சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நவநீதம் 'நவி' பிள்ளைக்கு ஜி.கே.வாசன் வாழ்த்து



சென்னை, அக். 11

அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற நவநீதம் 'நவி' பிள்ளைக்கு தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) தலைவர் ஜி. கே.வாசன்வாழ்த்துதெரிவித்துள்ளார்.நோபல்பரிசு2026 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தென்னாப்பிரிக்கச் சட்ட நிபுணர் நவநீதம் 'நவி' பிள்ளைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. சர்வதேச சட்டம், மனித உரிமைகள் மற்றும் அமைதியை நிலைநாட்ட அவர் ஆற்றிய வரலாற்று சிறப்புமிக்க பணிகளுக்காக இந்த விருது வழங்கப்படுவது பாராட்டுக்குரியது.வாழ்த்துநோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்தியாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் உலக அரங்கில் பேரும் புகழும் பெற்றுத்தந்திருக்கிறார். இதனால் உலகத் தமிழர்கள் பெருமிதம் அடைகிறார்கள். மேலும் இந்தியர்களுக்கு ஊக்கமும், நம்பிக்கையும் அளித்துள்ளார். தனது அறிவுத்திறனால், கடின உழைப்பால், அர்ப்பணிப்பான உணர்வால் நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது போற்றுதலுக்குரியது. அமைதிக்கான நோபல் பரிசுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தமிழ் வம்சாவளியை சேர்ந்த நவநீதம் 'நவி' பிள்ளை அவர்களை தமிழ் மாநில காங்கிரஸ்(மூ) சார்பில் பாராட்டி, வாழ்த்துகிறேன்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்: வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைப்பு: தேர்தல் ஆணையம்




சென்னை, அக். 11

தமிழ்நாடு சட்டமன்றத்தின் 35. மதுராந்தகம் (தனி) மற்றும் 101. தாராபுரம் (தனி) ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல், 2026 – வாக்கு எண்ணிக்கைக்கு பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளை பாதுகாப்பாக வைத்தல். இது தொடர்பாக, தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்ததாவது:வாக்கு எண்ணிக்கைதமிழ்நாடு சட்டமன்றத்தின் 35. மதுராந்தகம் (தனி) மற்றும் 101. தாராபுரம் (தனி) ஆகிய சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 09.10.2026ஆம் நாளன்று இரண்டு வாக்கு எண்ணும் மையங்களில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள்/ தேர்தல் முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணுகை முகவர்களின் முன்னிலையில் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றுள்ளது. வாக்கு எண்ணுகை நடைமுறையின்போது தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களும்/தேர்தல் முகவர்களும் வாக்கு எண்ணுகையிட முகவர்கள் இருந்தனர். வாக்குகள் எண்ணப்பட்டபின்னர்சம்பந்தப்பட்ட தேர்தல்நடத்தும் அலுவலரால் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.கருப்பு நிற உறைவாக்கு எண்ணிக்கை நிறைவடைந்த பின்னர் வேட்பாளர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கண்காணிப்புக் கேமரா (CCTV) மற்றும் பாதுகாப்பு கண்காணிப்பின்கீழ், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும்கருவிகளிலிருந்து(VVPATs) அவற்றின் சீட்டுகள் (VVPAT Slips) வெளியே எடுக்கப்பட்டு, சட்டப்படியாக ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ள காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்காக கருப்பு நிற உறைகளுக்குள் வைக்கப்பட்டுள்ளன. முத்திரையிடப்பட்டுள்ளனமின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை வேட்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் காப்பறையில் பாதுகாப்பாக வைப்பதற்கு முன்னர், வேட்பாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூடி முத்திரையிடப்பட்டுள்ளன.தேர்தல் வழக்குகள்தேர்தல் வழக்குகளின்(Election Petitions) பட்டியலை சென்னை ஐகோர்ட்டு இறுதி செய்யும் வரையில், இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு நெறிமுறையின்படி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும். ஒருவேளை தேர்தல் வழக்குகள் தாக்கல் செய்யப்படும்பட்சத்தில், தேர்தல் வழக்குகள் இறுதியாக தீர்வு செய்யப்படும் வரையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் காப்பறையில் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தி.மு.க. என்றும் வலிமையானது என்பதை உணர்த்தியுள்ள மதுராந்தகம் தொகுதி வாக்காளர்கள் பரந்தாமன்



சென்னை, அக். 11

தி.மு.க. என்றும் வலிமையானது என்பதை உணர்த்தியுள்ள மதுராந்தகம் தொகுதி வாக்காளர்களுக்கு மனமார்ந்த நன்றி என்று அக்கட்சியின் சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பரந்தாமன் தெரிவித்துள்ளார்.தி.மு.க. என்றும் வலிமையானதுஇதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:குதிரை பேர த.வெ.க அரசால் மக்கள் மீது திணிக்கப்பட்ட இடைத்தேர்தலில் மதுராந்தகம் தொகுதி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக போட்டியிட்ட எனக்கு 54 ஆயிரம் வாக்குகளை அளித்த மதுராந்தகம் வாக்காளர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்தல் களத்தில் வெற்றியும் தோல்வியும் இயல்பானவை. அதுவும், திணிக்கப்பட்ட இடைத்தேர்தல் களத்தில், ஆளுங்கட்சியினரின் அனைத்து வகை அத்துமீறல்களையும், அதிகாரபலத்தையும், முதல்அமைச்சர் விஜய் தெருத் தெருவாக வலம் வந்ததையும் மீறி, தி.மு.க என்ற பேரியக்கத்தின்மீதுநம்பிக்கைவைத்துஉதயசூரியனுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குகள், தி.மு.க. என்றும் வலிமையானதுஎன்பதைஉணர்த்துகின்றன.இரண்டாம் இடம்பொதுத்தேர்தலில் பெற்ற மூன்றாம் இடத்திலிருந்து, இடைத்தேர்தலில் இரண்டாம் இடத்திற்கு முன்னேறி வந்திருப்பதன் மூலம், தமிழ்நாட்டு மக்களின் உள்ளங்களிலிருந்து கழகத்தை எவராலும் பிரிக்கமுடியாது என்பது உறுதியாகியுள்ளது. மதுராந்தகத்தில் கழக வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பினைஎனக்குவழங்கியகழகத்தலைவர்திராவிட நாயகர் அவர்களுக்கும், வழிநடத்திய கழகத்தின் இளம்தலைவர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும்எனதுநெஞ்சார்ந்தநன்றியைதெரிவித்துக் கொள்கிறேன்.தேர்தல் களத்தில் கழகத்திற்காக பரப்புரையாற்றிய கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி., மற்றும் தோழமைக்கட்சித் தலைவர்கள், தேர்தல் பணியினை ஒருங்கிணைத்துப்பணியாற்றிய திமுக சட்டமன்றக் கட்சி கொறடா எ.வ.வேலு, தேர்தல் பொறுப்பாளர்கள் த.மோ. அன்பரசன், க.சுந்தர் களத்தில் பாடுபட்ட முன்னாள் அமைச்சர்கள்,மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள், இன்னாள் உறுப்பினர்கள், ஒன்றியநகரபேரூர்க் கழக நிர்வாகிகள், கிளைகழக நிர்வாகிகள் இளைஞரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் உடன்பிறப்புகள், தோழமைக் கட்சியினர், இளந்தலைமுறை திராவிட இயக்கத்தினர், தன்னார்வலர்கள் பொதுவாக நான் வெற்றிப்பெற வாழ்த்திய பொதுமக்கள், பத்திரிக்கை, ஊடக நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இதயப்பூர்வமான நன்றி. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!: பூவிருந்தவல்லி வடபழனி இடையே நாளை முதல் மெட்ரோ ரெயில் இயக்கம்



சென்னை, அக். 11

இரு திசைகளிலும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ ரெயில் சேவைகள் இயக்கப்படும் என மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. பூவிருந்தவல்லி வடபழனிஇது தொடர்பாக வெளியான செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது;சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தின் கட்டம்II வழித்தடம் 4ல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை மெட்ரோ ரெயில் நிலையம் முதல் வடபழனி மெட்ரோ ரெயில் நிலையம் வரை 15 கி.மீ. நீளத்திற்கு 11 உயர்மட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களில் நாளை (அக்டோபர் 11, 2026) முதல் மெட்ரோ ரெயில் பயணிகள் சேவை தொடங்கப்படுகிறது என்பதை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறது. பூவிருந்தவல்லி புறவழிச்சாலை, பூவிருந்தவல்லி பேருந்து நிலையம், பூவிருந்தவல்லி அரசு மருத்துவமனை, கரையான் சாவடி, குமணண் சாவடி, காட்டுப்பாக்கம், அயப்பன்தாங்கல், தெள்ளியாரகரம், போரூர் புறவழிச்சாலை, போரூர் சந்திப்பு மற்றும் வடபழனி ஆகிய 11 மெட்ரோ ரெயில் நிலையங்கள் இந்த வழித்தடத்தில் உள்ளன. ரெயில் சேவை நேரம்தொடக்க நாளான 11 அக்டோபர் 2026 அன்று, மெட்ரோ ரெயில் சேவைகள் மாலை 4 மணி முதல் தொடங்கி, இரு திசைகளிலும் இரவு 9 மணி வரை இயக்கப்படும். அதனைத் தொடர்ந்து, மறுநாளான 12 அக்டோபர் 2026 முதல், இந்த 15 கி.மீ. நீளமுள்ள வழித்தடத்தில் இரு திசைகளிலும் காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை மெட்ரோ ரெயில் சேவைகள் இயக்கப்படும். நாள்தோறும் இரு முனையங்களிலிருந்தும் (பூவிருந்தவல்லி புறவழிச்சாலை மெட்ரோ மற்றும் வழித்தடம் 4 வடபழனி மெட்ரோ) கடைசி மெட்ரோ ரெயில்சேவைஇரவு9மணிக்குபுறப்படும்.பொதுமக்கள் மற்றும் பயணிகள் அனைவரும் மெட்ரோ ரெயில் சேவைகளைப் பயன்படுத்தி, தங்களது பயணங்களை அதற்கேற்ப திட்டமிட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu Dhina Kani Daily Morning Newspaper
Press Register General of India
PRGI NO TNTAM/2023/88253

11.10.2026

# ரூ.65 கோடி மதிப்பீட்டில் 356 புதிய வாகனங்கள்: சென்னை மாநகராட்சி ஆணையாளர் தொடங்கி வைத்தார்



சென்னை, அக். 11

திடக்கழிவு மேலாண்மைக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடுகளை மேம்படுத்தவும் ரூ.65 கோடி மதிப்பீட்டில் 356 புதிய வாகனங்களை சென்னை மாநகராட்சி ஆணையாளர் தொடங்கி வைத்தார். திடக்கழிவு மேலாண்மை கட்டமைப்புஇதுதொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: சென்னையின் திடக்கழிவு மேலாண்மைக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், 2026ஆம் ஆண்டின் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடுகளை மேம்படுத்தவும், சுமீத் எல்கோவின் ஏற்கனவே உள்ள வாகன தொகுப்புடன் ரூ.65 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 356 புதிய வாகனங்களும், 2,873 குப்பைத் தொட்டிகள் மற்றும் உபகரணங்களும் சேர்க்கப்பட்டு, அதன் பயன்பாட்டினை மாநகராட்சி ஆணையாளர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., இன்று (10.06.2026) தேனாம்பேட்டை மண்டலம், லாயிட்ஸ் காலனியில் தொடங்கி வைத்தார். மேலும், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் மாநகரை தூய்மையாகபராமரிப்பதிலும்,பருவமழை காலத்திலும் அத்தியாவசிய பணிகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்வதிலும் முக்கிய பங்காற்றும் தூய்மைப் பணியாளர்களை பாராட்டும் வகையில், அவர்களுக்கு சீருடைகள் மற்றும் மழைக்கோட்டுகளையும் வழங்கினார். வடகிழக்கு பருவமழைசென்னையின் திடக்கழிவு மேலாண்மை கட்டமைப்பை வலுப்படுத்தவும், 2026ஆம் ஆண்டின் வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் முன்னேற்பாடுகளை மேம்படுத்தவும், ஏற்கனவே உள்ள வாகன தொகுப்புடன் கூடுதலாக 356 புதிய வாகனங்களும், 2,873 குப்பைத் தொட்டிகள் மற்றும் உபகரணங்களும் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் 283 மின்கலத்தில் இயங்கும் வாகனங்கள் (BOVs), 37 குப்பை அழுத்தும் வாகனங்கள் (Refuse Compactors), 28 இரண்டு டன் திறன் கொண்ட வாகனங்கள், 7 கொக்கி மூலம் கழிவுத் தொட்டிகளை ஏற்றும் வாகனங்கள் (Hook Loaders), 1 இயந்திர பெருக்கி வாகனம் (Mechanical Sweeper), 2,854 எண்ணிக்கையிலான 1,100 லிட்டர் கொள்ளளவு கொண்ட குப்பைத் தொட்டிகளும், 18 எண்ணிக்கையிலான 20 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட ஸ்கிப் தொட்டிகளும் அடங்கும். களப்பணிக் குழுக்கள் இந்தக் கூடுதல் வசதிகள் மூலம் குப்பைகளை சேகரித்தல் மற்றும் எடுத்துச் செல்லும் பணிகள் வலுப்பெறும். குறிப்பாக, அதிக அளவில் உருவாகும் கழிவுகளைக் கையாள்வதுடன், கனமழையின்போது அதிக அளவில் குப்பைகள் சேரும் பகுதிகளில் களப்பணிக் குழுக்கள் விரைவாகச் செயல்படவும் உதவும். இதன் மூலம், பருவமழை காலம் முழுவதும் குப்பைகளை உரிய நேரத்தில் அகற்றுதல், சாலைகளை தூய்மையாக பராமரித்தல் மற்றும் தடையற்ற திடக்கழிவு மேலாண்மைச் சேவைகளை உறுதி செய்தல் ஆகியவை நோக்கமாக கொண்டுள்ளன. இந்நிகழ்ச்சியில், துணை ஆணையாளர் (சுகாதாரம்), தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., சுமீத் எல்கோ நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் மஹ்மூத் சையத் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக முட்டை தினத்தை முன்னிட்டு 10,000 வேக வைத்த முட்டைகள் இலவசமாக விநியோகம்



நாமக்கல், அக். 11

உலகமுட்டைதினத்தைமுன்னிட்டு, நாமக்கல்லில் கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் சார்பில் பொதுமக்களுக்கு 10,000 வேக வைத்த முட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டன. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வெள்ளிக்கிழமைஉலகமுட்டைதினமாகஉலகளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில், நேற்று (வெள்ளிக்கிழமை) அன்று நாமக்கல் பூங்கா சாலையில் தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கம் சார்பில் சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில் சங்கத் தலைவர் சிங்கராஜ் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு வேக வைத்த முட்டைகளை வழங்கி விநியோகத்தைத் தொடங்கி வைத்தார். இந்த விழாவில் பொதுமக்களுக்கு 10,000 வேக வைத்த முட்டைகள் இலவசமாக வழங்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து மனித உடலுக்குத் தேவையான புரதச்சத்துக்கள் முட்டையில் அதிகளவில் உள்ளதைக் குறித்தும், தினமும் ஒரு முட்டை சாப்பிடுவதன் அவசியம் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்திகள் துண்டுகாகிதங்கள் மூலம் வழங்கப்பட்டன. முட்டை உற்பத்தி குறித்து பேசிய பண்ணையாளர்கள், சமீபகாலமாக கோழித்தீவன மூலப்பொருட்களான மக்காச்சோளம் மற்றும் சோயா புண்ணாக்கு ஆகியவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் கோழிப்பண்ணைத் தொழில் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருவதாக கவலை தெரிவித்தனர். பொதுமக்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் எனப் பலரும் இந்த நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்துகொண்டு முட்டைகளை பெற்று சென்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (11.10.2026)

**மேஷம்**: புதிய முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கலாம். பண விஷயங்களில் திட்டமிட்டு செயல்படுங்கள்.

**ரிஷபம்**: குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். செலவுகளைக் கட்டுப்படுத்துவது நல்லது.

**மிதுனம்**: வேலை மற்றும் தொழிலில் புதியவாய்ப்புகள்உருவாகலாம். பேச்சில் கவனம் தேவை.

**கடகம்**: குடும்ப ஆதரவு கிடைக்கும். முக்கிய முடிவுகளை நிதானமாக எடுங்கள்.

**சிம்மம்**: தொழில் முயற்சிகளில் உற்சாகம் அதிகரிக்கலாம். உடல்நலத்தில் கவனம் செலுத்துங்கள்.

**கன்னி**: திட்டமிட்ட காரியங்களை முடிக்க வாய்ப்பு உண்டு. பணப் பரிவர்த்தனைகளில்எச்சரிக்கை அவசியம்.

**துலாம்**: உறவுகளில் விட்டுக்கொடுத்துச் செல்வது நன்மை தரும். புதிய முயற்சிகளில் பொறுமை தேவை.

**விருச்சிகம்**: தடைகளைத் தாண்டி முன்னேறலாம். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும்.

**தனுசு**: கற்றல் மற்றும் தொழில் சார்ந்த முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கலாம்.

**மகரம்**: உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்க வாய்ப்புள்ளது. சேமிப்பில் கவனம் செலுத்துங்கள்.

**கும்பம்**: புதிய வாய்ப்புகள் வரலாம். பொறுப்புகளைத் திட்டமிட்டு நிறைவேற்றுங்கள்.

**மீனம்**: தள்ளிப்போன வேலைகள் முடிவடைய வாய்ப்புள்ளது. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவலாம்.

# புதுக்கோட்டை: சம்பள பாக்கி கேட்டு ஊழியர்கள் தகராறு பர்னிச்சர் கடை உரிமையாளர் அடித்துக் கொலை




புதுக்கோட்டை, அக். 11

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் மெய்யப்பட்டியை சேர்ந்தவர் பிரபு(43). இவர், திருமயம் கடைவீதியில் பர்னிச்சர் என்ற கடை நடத்தி வந்தார். அவரது கடையில் கரூர் மாவட்டம் திட்டகுடியை சேர்ந்த அய்யாதுரை (28), குளித்தலை கார்த்திக் (30) ஆகியோர் வேலை செய்து வந்தனர். இந்நிலையில், சந்தைப்பேட்டையில் உள்ள பர்னிச்சர் குடோனில் நேற்று முன்தினம் இரவு பிரபு நின்று கொண்டிருந்தார். அப்போது அய்யாதுரையும், கார்த்திக்கும் அங்கு சென்று தங்களது சம்பள பாக்கி குறித்து பிரபுவிடம் கேட்டதாக தெரிகிறது. அப்போது அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில் அய்யாதுரையும், கார்த்திக்கும் தங்கள் கைகளில் அணிந்திருந்த காப்புகளால் பிரபுவை பலமாக தாக்கியுள்ளனர். இந்த தாக்குதலில் பிரபுவின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மயங்கி விழுந்தார். அவரை தாக்கிய இருவரும் அங்கிருந்து தப்பியோடினர். இதையடுத்து அருகில் இருந்தவர்கள் பிரபுவை மீட்டு திருமயம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் பிரபு ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த திருமயம் போலீசார், தப்பியோடிய அய்யாதுரை மற்றும் கார்த்திக்கை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# ஏகன் நடிக்கும் “ஹைக்கூ” படத்தின் முதல் பாடல் வெளியீடு




ஏகன் நடிக்கும் ‘ஹைக்கூ’ படத்தின் ‘கருவிழி’ முதல் பாடலை படக்குழு வெளியிட்டுள்ளது. ‘ஜோ’ திரைப்பட தயாரிப்பாளர்களின் மற்றுமொரு தரமான திரைப்படமான நடிகர் ஏகனின் ‘ஹைக்கூ’ படப்பிடிப்பு கடந்த ஆண்டு டிசம்பரில் தொடங்கியது. இந்தப் படத்தில் ‘ஜோ’, ‘கோழிப்பண்ணை செல்லதுரை’ படப் புகழ் ஏகன் கதாநாயகனாக நடிக்க, அவருடன் ‘மின்னல் முரளி’, ‘சேஷம் மைக்கேல்பாத்திமா’ படப்புகழ் பெமினா ஜார்ஜ் மற்றும் ‘கோர்ட்’ திரைப்படத்தில் நடித்த ஸ்ரீதேவி அப்பல்லா ஆகியோர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். ‘ஜோ’ திரைப்படத்தை இயக்கிய ஹரி ஹரன்ராம் ‘ஹைக்கூ’ படத்திற்கு கூடுதல் திரைக்கதை எழுதுகிறார். யுவராஜ் சின்னசாமி இயக்குகிறார். நடிகர் ஏகன் நடிக்கும் ‘ஹைக்கூ’ திரைப்படத்தின் டிஜிட்டல் ஸ்ட்ரீமிங் உரிமைகளை படப்பிடிப்பு தொடங்குவதற்கு முன்பே நெட்பிலிக்ஸ் நிறுவனம் கைப்பற்றியுள்ளதாக படக் குழுவினர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர். திரையரங்குகளில் படம் வெளியாகும்வரை காத்திருக்காமல் அதற்கு முன்பே டிஜிட்டல் உரிமைகளை நெட்பிலிக்ஸ் வாங்கியிருப்பது கதை மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறது.

# “அமெரிக்க ஆவி” படத்தில் பாரதிராஜாவுக்கு மரியாதை... நடிகர் நெப்போலியன்




‘அமெரிக்க ஆவி’ திரைப்படத்தின் இசையை சென்னையில் உள்ள ஜப்பான் நாட்டின் துணை தூதரான டாக்கா ஹாசி மற்றும் திரைப்பட தயாரிப்பாளர் ஆதித்யா ராம் ஆகியோர் இணைந்து வெளியிட, தயாரிப்பாளர் கண்ணன் ரவி பெற்றுக்கொண்டார். ‘அமெரிக்க ஆவி’ திரைப்படத்தில் நடிகர் நெப்போலியன் முதன்மையான வேடத்தில் நடித்திருக்கிறார். இவருடன் 200க்கும் மேற்பட்ட அமெரிக்கா வாழ் புதுமுக நடிகர்கள் நடித்திருக்கிறார்கள். இந்த திரைப்படத்திற்கு ஆதிஷ் உத்ரியன் இசையமைத்திருக்கிறார். காமெடி ஹாரர், திரில்லராக தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை ஜீவன் பிலிம்ஸ் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர்கள் தனுஷ் நெப்போலியன் மற்றும் குணால் நெப்போலியன் ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கிறார்கள். படத்தை அறிமுக இயக்குநர் தஞ்சை ஜே பி ஆர் இயக்கியிருக்கிறார். முழுக்க முழுக்க அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட முதல் தமிழ் திரைப்படம் இது என்ற பெருமிதத்துடன் விரைவில் உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியிட திட்டமிடப்பட்டிருக்கும் இத்திரைப்படத்தின் இசை மற்றும் முன்னோட்ட விழா சென்னையில் உள்ள கமலா திரையரங்க வளாகத்தில் நடைபெற்றது. படக்குழுவினருடன் தமிழ் திரையுலக பிரபலங்கள் பலரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். நடிகர் நெப்போலியன் பேசுகையில், “ ‘அமெரிக்க ஆவி’ திரைப்படத்தில் 200 பேர் புதுமுகமாக அறிமுகமாகி இருக்கிறார்கள். அவர்களில் மிக சிலர் மட்டுமே இங்கு இந்த நிகழ்விற்காக இங்கு வருகை தந்திருக்கிறார்கள். இதில் நடித்திருக்கும் அனைவரும் பெரிய பெரிய நிறுவனங்களில் பெரிய பொறுப்பில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் இந்த படத்திற்காக ஒதுக்கி தரும் நேரத்தை பயன்படுத்தி, 75 நாட்களில் இந்த திரைப்படத்தை உருவாக்கி இருக்கிறோம்.

திங்கள் முதல் வெள்ளி வரை அனைவரும் பரபரப்பாக இயங்குவார்கள். அதில் அவர்கள் எங்களுக்காக ஒதுக்கித் தரும் நேரத்தை சரியாக திட்டமிட்டு அந்த நேரத்தில் படப்பிடிப்பை நடத்தி இருக்கிறோம். இது மிகவும் கடினமான விசயம் தான். அமெரிக்காவில்.. இதுவரை சினிமா சூட்டிங்கை நேரில் வேடிக்கை பார்க்காதவர்கள் எல்லாம் இந்த படத்தில் நடித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் நானும், இயக்குநரும் பயிற்சி கொடுத்து இதில் நடிக்க வைத்திருக்கிறோம்.

குருநாதர் பாரதிராஜாவிற்கு மரியாதையை செலுத்தும் விதமாக ‘அமெரிக்க ஆவி’ படத்தில் சிறப்பு காட்சி வைத்துள்ளேன்.

சிவாஜி நடித்த ‘பாரத விலாஸ்’ படத்தில் இந்தியாவில் உள்ள அனைவரும் நடித்திருப்பார்கள். இதில் உலகம் முழுவதிலும் உள்ளவர்கள் நடித்திருக்கிறார்கள். ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் இதில் நடித்திருக்கிறார்கள். இந்த அளவிற்கு இந்த படம் மிகவும் வித்தியாசமான படம். பொழுதுபோக்காகவும் இருக்கும்” என்றார்.

# சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கத்திற்கு இடம் தேவை; முதல்அமைச்சரிடம் கோரிக்கை வைத்துள்ளோம்: நடிகை குஷ்பு

தென்னிந்திய சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கத்திற்கு இடம் வேண்டும் என்று தமிழக முதல்அமைச்சரிடம் கோரிக்கை வைத்துள்ளதாகவும், சங்கத்திற்காக நிதி திரட்ட மலேசியாவில் நிகழ்ச்சி நடத்த இருப்பதாகவும் நடிகை குஷ்பூ தெரிவித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது; “சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கத்திற்கு நிதி தேவைப்படுகிறது. எனவே தென்னிந்திய சின்னத்திரை தயாரிப்பாளர் சங்கத்திற்கு இடம் வேண்டும் என்று தமிழக முதல் அமைச்சர் விஜய்யிடம் நாங்கள் கோரிக்கை வைத்துள்ளோம்.

அவர் இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக சொல்லியிருக்கிறார். அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அதே சமயம், சங்கத்திற்கு நிதி திரட்டுவதற்காக ஒரு கலை நிகழ்ச்சி நடத்த உள்ளோம். அந்த நிகழ்ச்சியை மலேசியாவில் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நடத்த திட்டமிட்டுள்ளோம். அதில் நடிகர் சிம்பு கலந்து கொள்வதாக தெரிவித்துள்ளார். தயாரிப்பாளர்களுக்கு எப்போதும் நான் பக்கபலமாக இருப்பேன் என்று அவர் கூறியுள்ளார். நடிகர் சிம்புவுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.” இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ரஞ்சி கோப்பை கிரிக்கெட் இன்று தொடக்கம்... முதல் போட்டியில் ராஜஸ்தானுடன் மோதும் தமிழகம்



இந்தியாவில் நடைபெறும் பிரதான முதல் தர கிரிக்கெட் தொடரான ரஞ்சி கோப்பையின் 92வது சீசன் இன்று பல்வேறு நகரங்களில் தொடங்குகிறது. இதில் தமிழக அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. 32 அணிகள் பங்கேற்பு இந்தியாவில் 1934ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரில், இந்த ஆண்டு எலைட் மற்றும் பிளேட் என இரு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. எலைட் பிரிவில் 32 அணிகள் இடம்பெற்றுள்ளன. அவை தலா 8 அணிகள் கொண்ட 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. டி பிரிவில் தமிழக அணிமுன்னாள் சாம்பியனான தமிழக அணி டி பிரிவில் இடம் பெற்றுள்ளது. இந்த பிரிவில் 42 முறை சாம்பியன் பட்டம் வென்ற மும்பை அணியுடன், சண்டிகர், அரியானா, இமாசலப் பிரதேசம், ரெயில்வே, ராஜஸ்தான், உத்தரகாண்ட் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் தனது பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு முன்னேறும். ராஜஸ்தானுடன் பலப்பரீட்சைஇன்று நடைபெறும் முதல் சுற்று லீக் ஆட்டத்தில் சாய் கிஷோர் தலைமையிலான தமிழக அணி, மானவ் சுதர் தலைமையிலான ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் காலை 9.30 மணிக்குத் தொடங்குகிறது. மேலும் படிக்கஇந்தியாவில் நடைபெறும் பிரதான முதல் தர கிரிக்கெட் தொடரான ரஞ்சி கோப்பையின் 92வது சீசன் இன்று பல்வேறு நகரங்களில் தொடங்குகிறது. இதில் தமிழக அணி தனது முதல் லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. 32 அணிகள் பங்கேற்புஇந்தியாவில் 1934ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரில், இந்த ஆண்டு எலைட் மற்றும் பிளேட் என இரு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டுள்ளன. எலைட் பிரிவில் 32 அணிகள் இடம்பெற்றுள்ளன. அவை தலா 8 அணிகள் கொண்ட 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. டி பிரிவில் தமிழக அணிமுன்னாள் சாம்பியனான தமிழக அணி டி பிரிவில் இடம் பெற்றுள்ளது. இந்த பிரிவில் 42 முறை சாம்பியன் பட்டம் வென்ற மும்பை அணியுடன், சண்டிகர், அரியானா, இமாசலப் பிரதேசம், ரெயில்வே, ராஜஸ்தான், உத்தரகாண்ட் ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன. லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் தனது பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்றின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் காலிறுதிக்கு முன்னேறும். ராஜஸ்தானுடன் பலப்பரீட்சைஇன்று நடைபெறும் முதல் சுற்று லீக் ஆட்டத்தில் சாய் கிஷோர் தலைமையிலான தமிழக அணி, மானவ் சுதர் தலைமையிலான ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது. இந்தப் போட்டி ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் காலை 9.30 மணிக்குத் தொடங்குகிறது. மேலும் படிக்க

# வங்காளதேச அணிக்கு எதிரான டெஸ்ட் : 2வது நாள் முடிவில் ஆப்கானிஸ்தான் அணி 211/4

வங்காளதேசத்துக்கு எதிரான ஒரே ஒரு டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தில், ரஹ்மத் ஷா மற்றும் அப்துல் மாலிக்கின் சிறப்பான பேட்டிங்கால் ஆப்கானிஸ்தான் அணி இரண்டாவது நாள் ஆட்டநேர முடிவில் ஆப்கானிஸ்தான் 4 விக்கெட் இழப்புக்கு 211 ரன்கள் எடுத்துள்ளது.

அபுதாபியில் நடைபெறும் இந்தப் போட்டியின் இரண்டாவது நாளில், வங்காளதேச அணி முதல் இன்னிங்ஸில் 346 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. முதல் நாள் ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 317 ரன்கள் எடுத்திருந்த வங்காளதேசம், இரண்டாவது நாளில் மேலும் 29 ரன்கள் மட்டுமே சேர்த்தது. ஆப்கானிஸ்தான் தரப்பில் முகமது சலீம் சஃபி 4 விக்கெட்டுகளையும், யாமின் அகமத்சாய் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய ஆப்கானிஸ்தான் அணிக்கு ஆரம்பத்தில் சில பின்னடைவுகள் ஏற்பட்டன. சேதிகுல்லா அடல் 17 ரன்களிலும், ஷாஹிதுல்லா கமால் 17 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். இதனால் ஆப்கானிஸ்தான் அணிக்கு நெருக்கடி ஏற்பட்டது. ஆனால், அப்துல் மாலிக் மற்றும் ரஹ்மத் ஷா இணைந்து மூன்றாவது விக்கெட்டுக்கு 70 ரன்கள் சேர்த்து அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். அப்துல் மாலிக் தனது முதல் டெஸ்ட் அரைசதத்தைப் பதிவு செய்து 62 ரன்களில் ஆட்டமிழந்தார். பின்னர் கேப்டன் ஹஷ்மத்துல்லா ஷாஹிதி 4 ரன்களில் ஆட்டமிழந்ததால் ஆப்கானிஸ்தான் 139 ரன்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது. ஆப்கானிஸ்தான் அணியின் நம்பிக்கையாகத் திகழ்ந்த ரஹ்மத் ஷா, நிதானமாக விளையாடி ரன்களைக் குவித்தார். அவருடன் இணைந்த விக்கெட் கீப்பர் இக்ரம் அலிகில், விக்கெட்டை இழக்காமல் சிறப்பாக விளையாடினார். 2வது நாள் முடிவில் ஆப்கானிஸ்தான் 4 விக்கெட் இழப்பிற்கு 211 ரன்கள் எடுத்தது. ரஹ்மத் ஷா 84 ரன்களுடனும், இக்ரம் அலிகில் 26 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.